கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 396/2015**

திரு. ஆர். பரமசிவம் (P.W. –3) **04.04.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்கிறீர்களா என்றால் ஆமாம். உண்மையைச் சொல்ல வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டதா என்றால் என்னுடைய சொத்திற்கு சம்பந்தப்பட்டது. தாவா சொத்திற்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தில் உள்ள ஓட்டு வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். இரண்டு வருடமாக தான் அவர்கள் அந்த ஓட்டு வீட்டில் உள்ளார்கள் என்றால் தவறு. 1999 ஆம் வருடத்தில் இருந்து வருகிறார்கள். 1999 ஆம் வருடத்திலிருந்து தாவா சொத்தில் உள்ள ஓட்டு வீட்டில் வாதிகள் வசித்து வருவதற்கு அவர்கள் பெயரில் பட்டா உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். பட்டா உள்ளது. பட்டா 5ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. வாதிகள் பெயரில் இல்லை. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்தில் வாதிகளுக்கு உரிமையோ பாத்தியமோ இல்லையென்றால் சரியல்ல. தாவா சொத்து மற்றும் பரிகாரங்களை பொறுத்து நான் ஒரு சம்பந்தம் இல்லாத சாட்சி என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் என்னுடைய சாட்சியம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே வாதிகள்தான் தாவா சொத்தில் சுவாதினத்தில் உள்ளார்கள் என்று முடிவு செய்ய முடியாது என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரிடம் தாவா சொத்து நிறைய நபர்கள் வந்து இடைஞ்சல் செய்ததை பொறுத்து மனு கொடுத்ததாக சொல்லி உள்ளீர்கள் எந்த

தேதியில் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் வேல்முருகன் நான்கு, ஐந்து ஆட்களை கூட்டி கொண்டு வந்து தடத்தில் வண்டியை நிறுத்திவிட்டு ஆயுதங்களுடன் வந்திருந்தார். 80 ஆட்கள் இருப்பார்கள்.

3. மனு கொடுத்த தேதி என்ன என்றால் எல்லோரும் சென்று இருந்தோம். தேதி ஞாபகம் இல்லை. வாதி 40 நாய்கள் வளர்ப்பதாக சொல்லி உள்ளீர்கள். அது சத்தம் போடுவது என் வீட்டிற்கு கேட்குமா என்றால் கேட்கும். வாதிகள் எதற்காக தாவா தாக்கல் செய்துள்ளார்கள் என்பதே எனக்கு தெரியாது. வாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1999 ஆம் வருடம் சொத்துக்களை கிரையம் பெறுவதற்கு முன்பு 1ம் வாதி மணிவண்ணன் எங்கு வசித்து வந்தார் என்றால் மன்னரையில் வசித்து வந்தார். சொத்துக்களை பொறுத்து 1ம் வாதி ஏற்கும் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தினாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதிக்கு உரிய சொத்துக்களின் ஆவணங்களை பார்த்து உள்ளேன் என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தை பொருத்து சார் பதிவாளர் அலுவலகத்தில் என்ன ஆவணங்கள் பதிவு ஏற்பட்டுள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2002 ஆம் வருடம் தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள கிரைய ஆவண விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2002 ஆம் வருடம் 1,2 வாதிகள் தாவா சொத்தை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டது தெரியுமா என்றால் தெரியாது.

2. அதன் பிறகு 3ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்து விட்ட விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. ஒரு சொத்தை பொருத்து ஒருவர் பெயரில் உரிமம் ஏற்பட்டால் அந்த சொத்திற்கு அவர்தான் உரிமையாளர் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2017 ஆம் வருடம் தாவா சொத்துக்களை வேல்முருகன் கிரையம் பெற்றது தெரியுமா என்றால் தெரியும். 5ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் நானும்,

மணிவண்ணனும் அவர் இல்லாத சமயத்தில் அத்து மீறி நுழைந்து உள்ளோம் என்றால் இல்லை. முதல் விசாரணையில் நான் ஆடு மாடுகள் மேய்ப்பதாக சாட்சி அளித்துள்ளேன். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்து தற்சமயம் காலி நிலமாக 70 தென்னை மரங்களுடன் உள்ளது என்றால் சரி. 100 தென்னை மரங்கள் உள்ளது.

3. தாவா சொத்தை 5ம் பிரதிவாதி 2017 ம் வருடம் கிரயம் பெற்று சுவாதீனத்தில் இருந்து வருவதை நானும், மணிவண்ணனும் சேர்ந்து மற்றவர்களுடன் அத்துமீறி நுழைந்து இடங்கள் செய்து வருகிறோம் என்றால் இல்லை. பொதுத்தடத்தில் ஆடு மாடுகளை கட்டி இடைஞ்சல் செய்வதாக முதல் விசாரணையும் சொல்லி உள்ளேன். அந்த இடம் பொது தடம் தான் என்றால் ஆமாம். வாதிக்கு ஆதரவாக அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.04.04 18:41:15 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.